# காந்தி சனசமூக நிலையத்தின்
# 65ஆவது ஆண்டு நிறைவு விழா
# மலர் வெளியீடு - 26.08.2018






27/8/18



## ஆசிச்செய்தி

65ஆவது அகவையில் காந்தி சனசமூக நிலையம் நாவற்குழி கிழக்குப் பிரதேசத்தின் நடுநாயகமாக விளங்குகின்ற காந்தி சனசமூக நிலையம் தனது 65 ஆவது அகவையில் தான் ஆற்றிய பணிகளால் தலை நிமிர்ந்து மனம் மகிழ்ந்து விழா ஒன்றைப் பெற்றுக் கொண்டுள்ளது. சமூக நிறுவனங்களால் சமூகம் பயனடைய வேண் டும். பத்திரிகை களை மாத்திரம் காட்சிப்படுத்திவிட்டு தூங்கிக் கிடக்கும் ஏராளமான சனசமூக நிலையங்கள் காணப்படும் அதேவேளை பல் பயன்பாடுடையதாக வடிவம் பெற்றுள்ள காந்தி சனசமூக நிலையம் பாராட்டப்படக் கூடியது.

மாணவர்களுக்கான கல்விச் சேவை சாதனையாளர் கௌரவிப்பு. குடிநீர் வழங்கல் சேவை. கல்விக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங் கல். சமய விழாக்களைக் கொண்டாடி கலாசாரப் பணி மேற்கொள்ளல். விளையாட்டு வீர வீராங்கனைகளை உருவாக்குதல். போட்டிகளை நடாத்துதல் போன்ற இன்னோரன்ன பணிகளை ஆற்றிவரும் இந் நிறுவனம் சமூகத்தின் மணிமுடியாகக் கருதக்கூடியது.

இளைஞர். யுவதிகளுக்கு முறையான பொழுதுபோக்கு வசதிகள். தொழில்வாய்ப்புக்கள் என்பவற்றை வழங்கி அவர்களை சரியான பாதையில் வழிகாட்டி விட்டால் நெறி பிறழ்வுகள். வன்முறைக் கலாசாரம் என்பன ஓய்ந்துவிடும். அத்தகைய ஒரு சிறப்பான பணியை காந்தி சனச மூக நிலையம் ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பல கல்விமான் களையும். கொடையாளிகளையும். பண்பாளர்களையும் உருவாக்கி செழிப்புடன் நிற்கும் காந்தி சனசமூக நிலையம் வெளிநாட்டு அன்பர்கள். ஆதரவாளர்கள் அனைவரையும் இணைத்துச் செயற்பட்டு உன்னத இடத்தில் நிற்கின்றது. இதன் பணி மென்மேலும் வளர்ந்து சமூகத்துக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும் என்று வாழ்த்தி ஆண்டுமலர் ஒன்றை வெளியீடு செய்ய முனைந்துள்ள இதன் பணியாளர்களைப் பாராட்டி பல்லாண்டுகாலம் இதன்பணி தொடரவும் ஆண்டு விழா சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டி நிறைவு செய்கிறேன்.

வாழ்க வளமுடன்

**திருமதி.வ.மேகலிங்கம்**
**ஓய்வுநிலை அதிபர்,**
**சமாதான நீதிவான்.**



## வாழ்த்துச் செய்தி

நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலையம் தனது 65 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதை யிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடை கின்றேன்.

அண்மைக்காலமாக காந்தி சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை அவதானிக்கின்ற பொழுது அது தனது பணிகளை அப்பிரதேச மக்களின் கல்வி. சுகாதாரம். விளையாட்டு மற்றும் கலை பண்பாட்டு விடயங்கள், வறிய மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் மற்றும் அருகிவரும் எமது சமூகவிழுமியங்களை வலுவூட்டல் போன்ற பல்வேறு விடயங் களிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் ஒரு சனசமூக நிலையம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிட்டு நல்லமுறையில் செயற்படுத்திவரும் நிர்வாகத்தினரைப் பாராட்டுவதுடன் இதன்மூலம் குறித்த பிரதேச மக்களின் அடிப்படை வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இத் தருணத்தில் காந்தி சனசமூக நிலையத்தை வாழ்த்தி அவர்களது பணி மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**சி.பவளகுமாரன்**

அதிபர், யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.



## வாழ்த்துச் செய்தி

நமது ஊரின் ஒரு வழிப்படுத்தலம் போல விளங்குவதும், அனைத்து உறவுகளாலும் நேசிக்கப்படுவதுமான "காந்தி" சனசமூக நிலையத்தின் அறுபத்தைந்தாவது (65) ஆண்டு விழாவுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

எங்கள் ஊர் மக்களின் கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டு என அனைத்துத் துறைகளின் முன்னேற்றத்துக்கு மிக நீண்டகாலமாக இந்த நிலையம் அருந்தொண்டாற்றி வருவதை நாம் அறிவோம். இதற்காக முன்னாள் இன்னாள் நிர்வாக சபையினர்களும் அங்கத்தவர்களும் அரும்பாடுபட்டு உழைத்திருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். இந்த நூல் நிலையத்தை ஆரம்பித்து வைத்து அருந்தொண்டாற்றிய ஆரம்பகர்த்தாக்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகூறி வாழ்த்துகின்றோம்.

எமது " காந்தி " சனசமூக நிலைய புலம்பெயர் வாழ் அமைப்பானது லண்டனைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது. நாம் உலகமெல்லாம் பரந்து வாழ்ந்தாலும் நமது மண்ணையும் மக்களையும் மறக்காமல் அவர்களோடு ஒன்றாகவே வாழ்ந்து வருகின்றோம். அந்த வகையில் புலம்பெயர் வாழ் உறவுகளின் நிதிப்பங்களிப்போடு சமூக நல வேலைத் திட்டங்கள் பலவற்றையும் வறியவர்களை இனங்கண்டு உதவுதல் எனப்பல வேலைத்திட்டங்களுக்கு உதவிகள் செய்து வந்துள்ளோம். தொடர்ச்சியாகவும் புலம்பெயர்வாழ் உறவுகள் நிதி உதவிகளை வழங்கி வருகின்றார்கள். புலம்பெயர்வாழ் நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளுக்கு இச்சந்தர்ப்பத்தில் மிகப்பெரிய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழர்களால் உயிரினும் மேலாகக் கருதப்படுவது கல்வியாகும். இந்தக் கல்வியோடு கலை, கலாசார விழுமியங்களை வளர்த்தெடுக்க வேண்டிய பங்கு சனசமூக நிலையங்களுக்கு உண்டு. அந்த வகையில் நமது ஊர் " காந்தி சனசமூக நிலையமானது மிக நீண்ட காலமாக அளப்பரிய சேவைகளைச் செய்துவருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இம்மேம்பாட்டுக்காக உழைத்துவரும் தற்போதைய நிர்வாக சபையினரையும் அங்கத்தவர்களையும் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம்..

எமது சனசமூக நிலையம் நூறாண்டுகள் கடந்து சந்ததி... சந்ததியாக வளர்ச்சிபெற்று உயர்ந்து நிற்க வேண்டும். சகல துறைகளிலும் முன்னேறிப் பெயர்பெற்று உயர்ச்சி பெற வேண்டும் என எல்லாம் வல்ல எங்கள் ஊர் கண்ணகை அம்மனை வேண்டி புலம்பெயர் உறவுகள் சார்பில் வாழ்த்துகின்றோம். போற்றி மகிழ்கின்றோம்!....

நன்றிகளுடன்

**ஜெ.ஜெயபாலன்**

தலைவர் "காந்தி" சனசமூக நிலைய

**புலம்பெயர் வாழ் நாடுகளின் கூட்டமைப்பு,**

**லண்டன்.**

# நிலையத் தலைவரின்
# வாழ்த்துச்செய்தி

எமது காந்தி சன சமூக நிலையம் தனது 65 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கின்றது. இவ் ஆண்டு எமது நிர்வாகத்தின் கீழ் இவ் ஆண்டு விழா நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது தந்தையார் எமது நிலைய ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோது நானும் அவருடன் இவ் வைபவத்தில் கலந்துகொண்டமை எமக்கு நன்கு நினைவில் இருக்கின்றது.

இவ் நிலையமானது ஆரம்ப காலத்தில் தென்மராட்சியிலேயே சிறந்த சன சமூக நிலையமாக திகழ்ந்ததாக அறியக் கூடியதாக இருக்கின்றது.

மேலும் தற்போது புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடனும். ஊர் பொது மக்கள் அனைவரையும் நிலைய அங்கத்தவர்களாக உள்வாங்கி அவர்களின் பூரண ஆதரவுடனும் பல வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றோம்.

எமது நிர்வாகக் காலத்தில் விளையாட்டுக் குழு அமைக்கப்பட்டு மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது தென்மராட்சி ரீதியில் பலர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி பல பதங்கங்களைப் பெற்றுக் கொண்டமை எமது கிராமத்திற்கு பெருமையை ஏற்படுத்தியுள்ளது.

இந் நூல் வெளியீடு சிறந்த முறையில் நடைபெற வாழ்த்துவதோடும். இந் நூல் வெளியீட்டுக்கு முன்னிற்று உழைத்த அனைவரைய் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

**ஆ. பாலேந்திரன்**
**தலைவர்**
**காந்தி சன சமூக நிலையம்**

# 65 ஆவது அகவையை ஆனந்தத்தோடு காணும் காந்தி நிலையம்

காந்தி சனசமூக நிலையம் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்றுவரை பொதுமக்களின் பொது நோக்கமாக கொண்டு பல சாதனைகளை தம்மகத்தே கொண்டுள்ளது. இவ்வாறாக எமது சமூகம் பல செயற் பாட்டாளர்கள். கல்விமான்கள். விளையாட்டு வீரர்கள். கலைவித்தகர் கள் அனைவரையும் தம் உள்ளே கண்டு ஆனந்தமும் அடைந்தது அவர்களை கௌரவிப்பதிலும் வெற்றி கண்டதும் நாமே. "மகிழ்வதில் முதல் மகிழ்வு பிறரை மகிழ வைத்து மகிழ்வது" அவ்வாறு மகிழ்விப்ப வர்களுக்கு இலக்கணமாணவர்களும் எமது தாய்பெற்றெடுத்த மண் மைந்தர்களே!

நிலையமானது பல தலைவர்கள். பல வெற்றியாளர்கள் பல விழாக்கள். பல கொண்டாட்டங்களை கண்டு இன்று 65 ஆண்டில் காலடி வைத்து மீண்டும் காந்தி சனசமூக நிலையம் எமது மண்ணில் தென்மராட்சியில் விமர்சையாக விளங்கிக்கொண்டிருக்கின்றதென்றால் அது மிகையா காது. பலரின் பார்வையை மீண்டும் எமது நிலையம் எமது மக்கள் மீது கொண்டுவருவதற்கு 2017 ஆம் ஆண்டு நடைபெற்றுமுடிந்த மாபெரும் இல்ல விளையாட்டுப் போட்டியையே சாரும். வீறு நடை போட்டுக் கொண்டிருக்கும் நிர்வாகசபைக்கு விட்டுக்கொடுக்காமல் உதவி புரியும் புலம்பெயர் உறவின் பக்கபலம் மிகவும் போற்றத்தக்கது. வரலாறு கானாத வெற்றிநாயகன் இன்று இலங்கை அணிகூட எட்டிப்பார்க்கும் அளவிற்கு எமது கிராமத்தில் ஒருவன் உதித்து பூத்துக் குலுங்கி நிலைத்திற்கு நிழல் தருகிறான் செ. மதுடின் அவனுக்கும் இந்த நிலை யம் வரவேற்று பாராட்டுவிழா நடத்த தவறவும் இல்லை எனவே இதனை போன்ற இன்னும் பல நிகழ்வுகள் கொண்டாட்டங்கள் இனிவரும் காலங்களிலும் இடம்பெற வேண்டுமென எதிர்பார்த்து வாழ்கபணி வாழ்க நிலையம் வளர்க மக்கள் என போற்றுகின்றோம்.

நன்றி


**வாழ்த்துச் செய்தியுன்**
**றகிதாஸ் (ரஞ்சித்),**
**நிலையச் செயலாளர்.**



இல்ல விளையாட்டுப் போட்டி - 2017
விருந்தினர்கள் விளையாட்டுப் போட்டியை பார்வையிடுதல்



இல்ல விளையாட்டுப் போட்டி அன்றைய தினம்
அனுசரணையாளர் நிலையத்திற்கு அனுசரயை வழங்கியபோது



காந்தி சனசமூக நிலைய
பொங்கல் விழா
2017 - 2018



இல்ல விளையாட்டுப் போட்டி - 2017

## ஸ்தாபகரின் வாழ்த்துச் செய்தி

உலகிலேயே எல்லாக்காரியங்களையும் செய்யமுடியாது பொதுவாக நல்ல செயல்கள் ஆற்றுவோர் ஒரு சிலர்தான். உயர்ந்த உள்ளமும். நுட்ப அறிவும் சிறந்த ஆற்றலும் உள்ளவர்கள் தான் உயர்ந்த செயல்களை உறுதியுடன் செய்து முடிப்பார்கள் எந் நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை செய் நன்றி கொண்டமகற்கு நாவற்குழி கிழக்கு வேலன்பிராய் கண்ணகி அம்மன் திருவருளால் காந்தி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழா நடைபெற இருப்பதையிட்டு நாமெல்லோரும் மட்டற்ற பெருமகிழ்ச்சியடைகின் றோம் வருடாவருடம் இவ்விழா நடைபெற எல்லாம் வல்ல சிவ பெருமான அருள் புரிய மன்றாட்டமாக வேண்டி மகிழ்ச்சியுடன் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**தங்கள் சேவைக்குரிய**

நடராசா (J.P)

## வாழ்த்துச் செய்தி

இன்றைய உலகம் இலத்திரனியல் மயமாகிவிட்டது உலகசந்தையும் நாடுகளுக்கிடையே திறந்த பொருளாதாரமகிவிட்டது சகல விடயங் களும் அலைபேசிக்குள்ளே கையடக்கமாகிவிட்டது இன்றைய இளை ஞர்கள் புத்தி கூர்மையிலும் செயல்திறனிலும் சென்ற தலைமுறையி னரைவிட ஒரு படி மேலே நிற்கிறார்கள்.

"என்னிடம் இருபது துணிச்சலான இளைஞர்களை தாருங்கள் நான் இந்தியாவை முன்னேற்றிக் காட்டுகின்றேன்" என்றார் சுவாமி விவேகானந்தர்"

எல்லாம் சரிதான் வேலம்பிராய் என்னும் இக் கிராமத்தின் அன்றைய தலைமுறை இளைஞர்கள் சமூகப்பணி பற்றிச் சிந்தித்திருக்கிறார்கள். வாழ்க்கையில் வறுமைக்கோட்டை தாண்டுவதற்கு அவர்கள் போராடிக் கொண்டிருந்தார்கள் இன்றைய தலைமுறையினர் சமூகத்திற்கு தீங்கான விளைவுகளைத் தருகின்றதும் எமது கலாச்சாரத்திற்கு வாழ்வை தோற்றிவிப்பதுமான காரியங்களை செய்வதாக அன்றாடம் பத்திரிகைகளல் படிக்கின்றோம். அன்று எமது வாழ்க்கை விழுமியங் களை போற்றவேண்டுமென்று சிந்தித்ததோடு அல்லாமல் அதற்கு செயல்வடிவமும் கொடுத்தார்கள். அதன் பெறுமதியாக 04.14.1953 இல் காந்தி சனசமூக நிலையம் தோற்றிவிக்கப்பட்டது.

இந்த நிலையத்தின் ஸ்தாபகர்கள் எனது சகபாடிகளாக நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கல்விகற்ற வந்தார்கள். என்பதையும் சொல்ல வேண்டும். எமது பாடசாலையின் யோகர்சுவாமிகளின் நேர்வழிச் சீடரான செல்லத்துரை சுவாமிகள் அதிபராக இருந்து பாடசாலைக்கும் அடுத்துள்ள கிராமங்களுக்கும் அரும்பணி ஆற்றியிருக்கிறார்கள் இப்படி யான நல்ல காரியங்களில் சுவாமிகளுடைய அருள்வாக்குகள் எங்களை ஈடுபட வைத்திருக்கின்றன என்பதை யாரும் மறுதலிக்க மாட்டார்கள்.

அன்றைய இந்நிலையத்தின் அமைப்பாளர்களை நான் நன்கு அறிவேன். திரு. சிங்கராஜா என்றால் ஓட்டப்பந்தயம். திரு . இராசதுரை என்றால் சைக்கிள் ஓட்டம். திரு. இராசநாயகம் என்றால் குண்டு தட்டு எறிதல் இவ்வாறு இன்னும் பல அன்று தங்களின் விளையாட்டுத் திறனை நிலைநாட்டியவர்கள் இருந்தார்கள்.

இன்று அவர்களின் அடுத்த சந்ததிகள் தொடர்ந்து அந்தப்பணியை முன்னெடுத்து வருகின்றார்கள் "சுரைக்காய் விதை போட்டால் பாகற்காய் வராது" என்பது இதுதான் போலும்.

இடைக்காலத்தில் நமதுநாட்டில் அமைதியற்ற சூழ்நிலை இருந்ததை நாம் அறிவோம் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து விடுபட்டு வருகிறோம். இந்தவகையில் இந்த நிலையம் தொடர்ந்து செய்கின்ற பல பணிகளில் ஒரு சிலற்றை தொட்டுக்காட்ட விரும்புகிறேன்.

- குடி நீர்த்தட்டுப்பாட்டிற்குத் தீர்வாக நீர் விநியோகத்தை ஒழுங்கு படுத்தல்
- மாணவருக்கு இலவச மாலைநேர வகுப்புக்களை நடத்துதல் விளையாட்டு வீர வீராங்கனைகளை கௌரவித்தல்.
- புலைமைப்பரிசில். பல்கலைக்கழக புகுமுக மாணவர்களை முக்கிய விழாக்களுக்கு அழைத்து கௌரவித்தல் இதில் விளையட்டு வீர வீராங்கனைகளும் சிறப்புத்திறன் விருத்தி உடையவர்களும் சேர்க்கப்படுவர்.
- புலம் பெயர் வாழ் நிர்வாகசபை என்ற அமைப்பை மீள உருவாக்கி சமூகப்பணியில் அவர்களையும் சேர வைத்தல்
- வேலம்பிராய் அம்மன் கோயில் வேட்டை திருவிழாவை சிறப்பாக நடத்தல் இந்த வகையில் கிராம முன்னேற்றத்திற்காக அரிய பணிகளை தொடர்ந்து செய்வதில் ஊக்கமுடைய இன்றைய நிர்வாக சபையின் இளைஞர்களை மனமார பாராட்டுகின்றேன் இந்த 65 ஆவது ஆண்டு விழா மிகவும் சிறப்பாக நடப்பதற்காக எம்மை ஆளுடைய இறைவனின் திருவருளை வணங்கி வாழ்த்தி அமைகின்றேன்.

"எண்ணுவார் நெஞ்சினில் நண்ணுவார் ஈசன்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"

**சு.சிவராசா**
**ஓய்வுநிலை ஆசிரியர்**
**நாவற்குழி.**

# வாழ்த்தி மகிழ்கிறோம்

அகிம்சா பேரொளி, உலகப்புகழ் மகாத்மா காந்தியின் பெயரைச் சூட்டிய "காந்தி" சனசமூக நிலையத்தின் ஆரம்ப கர்த்தாவாகிய எனது சகோதரர் திரு.வைரமுத்து நடராசா அவர்களையும் அவரோடு சேர்ந்த உறவு களையும் நட்புக்களையும் முதற்கண் வாழ்த்துகின்றேன். இந்தச் சன சமூக நிலையம் ஆரம்பித்து (65) அறுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு செய்வதை வாழ்த்தி மகிழ்கின்றேன்.

நூறு கோயில்களுக்கு ஒரு பாடசாலையின் பங்கு சரிசமன் என்று அறிஞர்கள் கூறுவார்கள். அந்த வகையில் கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளாக நம்மவர்களின் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு எனவும் இயல், இசை, நாடகம் என முத்தமிழுக்கும் பாரிய பங்காற்றி வரும் நமது ஊர் காந்தி சனசமூக நிலையத்தின் பங்கு அளப்பரிய தாகும்.

இந்த வேலம்பராய் மண்ணில் பிறந்து வளர்ந்தவன் என்ற ரீதியில் இந்த நிலையத்தோடு எனக்கும் அதிக ஈடுபாடு இருந்திருக்கின்றது. இந்த நிலையத்தில் நான் ஒரு மாணவனாக ஒரு விளையாட்டு வீரனாக இருந்திருக்கின்றேன். பின்னாளில் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியராகவும் நிலையத்தின் விளையாட்டுப் பொறுப்பாளராகவும் நிலையத்தின் பொதுக் காரியதரிசியாகவும் பணியாற்றியிருக்கின்றேன். நிலையம் சார்பாகப் பல விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு நிலையத்துக்குப் புகழ் சேர்த்திருக்கின்றேன்.

நான் பிறந்த ஆண்டுதான் இந்த வாசிகசாலை ஆரம்பிக்கப்பட்டது என்னும்போது எனக்கும் இந்த வாசிகசாலைக்கும் ஒரே வயது என்பதை அறிந்து மகிழ்வுறுகின்றேன். நாம் எவ்வளவு காலம் வாழ்ந் தோம் என்பது முக்கியமல்ல. நாம் வாழும் சமூகத்துக்கு என்ன செய் தோம் என்பதே முக்கியமாகும். அந்த வகையில் தமிழ்ச் சமூகத்துக்கும் நம் வாசிகசாலைக்கும் என்னாலான பல பணிகளைச் செய்திருக்கின் றேன் என்னும் போது பெருமை கொள்கின்றேன்.

நம் ஊரில் முன்னர் வாழ்ந்தவர்களும் இப்போது வாழ்ந்து கொண்டிருப் பவர்களும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருப்ப வர்களும் நமது வாசிகசாலைக்குப் பெரும் பங்களிப்புகளை உதவி

களைச் செய்துவருவதால் இன்று நமது வாசிகசாலை பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு பல சாதனைகளைப் படைத்து வடபகுதியில் பெயர்போன சனசமூக நிலையமாகப் புகழ் பரப்பிக் கொண்டிருக் கின்றது. இச்சந்தர்ப்பத்தில் அனைத்துத் தரப்பினர்களும் பாராட்டுக்குரிய வர்களே. அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் பகிர்ந்து நிற்கின் றேன்.

ஆம் எமது சனசமூக நிலையத்தின் அறுபத்தைந்தாவது (65) ஆண்டு விழா மிக நீண்டகாலங்களின் பின்பு மிகச் சிறப்பாக நடைபெறுவதை எண்ணி நானும் மகிழ்வுறுகின்றேன். மக்களோடு மக்களாக உழைத்து சேவை செய்துவரும் நிலையத்தின் இந்நாள், முன்னாள் நிர்வாகத்தி னரையும் உறுப்பினர்களையும் வாழ்த்துகின்றேன். பாராட்டுகின்றேன். அத்தோடு நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து நிதி உதவிகளை அள்ளி வழங்கிவரும் புலம்பெயர் தேசங்களைச் சேர்ந்த நம் ஊரின் உறவுகளையும் நன்றியோடு வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

மேலும் எமது நிலையம் நூறாண்டுகள் காண வேண்டும் என்பதே எனது அவாவாகும். நம்மவர்களின் பண்பும் உழைப்பும் ஒற்றுமையும் வளர்ச்சிபெற்று எல்லோரும் முன்னேற வேண்டும். வாசிப்பையும் நேசிப்பையும் ஒன்றாய் வளர்த்து உயர்ச்சி பெற்று வாழ்வோம். மானிட நேயம் தழைத்தோங்கி மகிழ்வுடன் வாழ்வோம் என என் தேசத்தின் நேசங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்"

**அன்புடன்**
வைரமுத்து சிவராசா
**பிரதம ஆசிரியர் - மண் கலை இலக்கிய சஞ்சிகை**
**தலைவர் - தமிழ் எழுத்தாளர் சங்கம் - ஜேர்மனி.**
Tel :- 203 – 807 3898
Email :- v.sivarajah@arcor.de

## வாழ்த்துகின்றோம் (ஆசியுரை)

காந்தி ச.ச.நிலையம் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடும் வேளை வெளியிடுகின்ற மலருக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பெருமையடைகின்றேன்.

சனசமூக நிலையம் என்பது எழுச்சியுடன் வளர்ந்து வருகின்றதொரு சமுதாயம் ஆகும். ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை பொது நோக்கமாகக் கொண்டு வரலாறு படைத்தவர்கள் எமது மண்ணில் இருக்கின்றார்கள். பல விளையாட்டு வீரர்கள் பல நற்காரியங்களைத் தம்மகத்தே கொண்டு சிறந்த சன சமூக நிலையமாக விளங்குவதையிட்டு மகிழ்வடைகின்றேன். நிலைய வளர்ச்சியில் எனது பங்கும் அதிகம் இருந்திருக்கின்றது என்பதனை நினைத்து மீண்டும் பெருமையடைகின்றேன்.

நிலையம் மென்மேலும் வளர வேண்டும். வளர வைக்க வேண்டும் என எல்லாம் வல்ல அம்பாளின் பாதக் கமலங்களை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சிங்கராசா**

**நிலைய நிர்வாக உறுப்பினர்**

**நிலைய நலன்விரும்பி**

**கோவிலாக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்.**




இல்லங்களின் அலங்காரம் சிவப்பு இல்லம் - 2017



இல்ல விளையாட்டுப் போட்டி - 2017 வீரர்கள்



மைதான அலங்காரம் - 2017



குடிநீர் விநியோகம்
2018



தென்மராட்சி ரீதியில்
துடுப்பாட்ட போட்டி
இறுதிப் போட்டி 2017
எமது நிலைய அணி
2018



தென்மராட்சி ரீதியில் மின்னொளியிலான கிளிதட்டுப் போட்டி
இறுதிப்போட்டியில் வெற்றிப்பெற்ற நிலைய மகளிர் அணி-2018

# வாழ்த்துரை (ஆசியுரை)

காந்தி ச.ச.நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழா மென்மேலும் சிறக்க வாழ்த்துவதோடு விளையாட்டுக்களில் மனிதன் ஆரோக்கியமான கட்டுடலைப் பெறுகின்றான். அதேபோல விளையாட்டு வீரர்களால் நிலையம் கட்டுக்கோப்பான நிர்வாகத்தைக் கொண்டிருக்கின்றது. தென்மராட்சியில் சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகளைத் தம்மகத்தே கொண்ட பிரதேசம் எமது பிரதேசம். வீறு நடைபோட்டுக் கொண்டிருக்கின்ற வெற்றியாளர்கள் விட்டுக் கொடுக்காமல் தங்கள் கைகளில் தவழுகின்ற வெற்றிக் கிண்ணத்தை மென்மேலும் கிடைக்கப் பெறவேண்டும். விளையாட்டோடு மட்டுமல்லாது கல்வி, கலை ஆகியவற்றிலும் சிறப்பாக செயற்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**வி.க.தலைவர்**
**க.அன்ரன் தேவகுமார்.**

# வாழ்த்துகின்றோம் (ஆசியுரை)

காந்தி சனசமூக நிலையம் 65 ஆவது ஆண்டுநிறைவு விழாவினைக் கொண்டாடும் வேளையில் வெளியிடுகின்ற மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில்பெருமகிழ்வடைகின்றோம். சமூக சேவையில் 65 வருடங்களாக ஈடுபட்டு மீண்டும் புது உத்வேகத்துடன் எழுகின்ற வேளையில் எத்தனை இடர்கள், தடைகள், எதிர்ப்புக்கள், குறைகள் தாண்டி வந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்ப்பதும் அவர்களது ஆக்கப் பணிகள் பற்றி ஒரு கணம் மீட்டுப் பார்ப்பதும் புது அனுபவத்தைக் கற்றுத் தருகின்றது.

சனசமூக நிலையம் என்பது எழுச்சியுடன் வளர்ந்து வருகின்ற ஒரு சமுதாயக் கட்டமைப்பின் எளிய அலகாகும். இங்கு மக்கள் தாங்கள் பெற்று வைத்திருக்கும் அறிவுக்குத் தகுந்தாற் போலக் கூடிக்கதைத்து, கலந்து, முடிவெடுத்துத் தாம் சார்ந்த சமூகத்தை மேம்படுத்த முயல்வர். இச்சிறிய நல் ஆரம்ப அலகே பெரிய பெரிய ராஜ்சியங்களைக் கட்டுப் படுத்துவனவாகவும் இருப்பதைக் காணமுடியும். ஒரு நூலகம் திறக்கப்படும்போது

அங்குள்ள புத்தகங்கள் பல விரும்பித் திறக்கப்படும்வேளை, பல சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்பது மிகவும் உண்மையான கூற்றாகும்.

மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த எமது பிரதேசத்துப் பெற்றோர்கள் தங்கள், தங்கள் பிள்ளைகளை உயர்கல்விக்காகப் பட்டினம் நோக்கி அனுப்பி விட அங்கே பண்பட்ட சமூகக் கட்டமைப்பைக் கண்டு தமது கிராமத்தையும் அவ்வகையில் மாற்றி அமைக்க வேண்டும் என எண்ணங்கொண்ட வைரமுத்து நடராசா என்ற இளைஞன் தனது நண்பர்களான தம்பிநாயகம், பரமசாமி, தம்பிராசா, குணசிங்கம், ஐயாத் துரை, சுப்பிரமணியம் போன்றவர்களுடன் இன்னமும் பலரையும் சேர்த்து ஆரம்பித்த சனசமூகநிலையம் இன்று 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றதென்பதைக் கண்டு மனம் பூரிக்கின்றது.

ஆண்டுதோறும் இவர்கள் எடுத்து வருகின்ற நிறைவு விழாவின்போது மிகச்சிறப்பாக நடத்தி வருகின்ற மெய்வல்லுநர் திறனாய்வானது

உடலுழைப்பாலே வாழ்ந்து வருகின்ற இப்பிரதேச மக்களின் மகிழ்வுக்கும் குதூகலிப்புக்கும் களம் அமைத்துத் தருவருடன் பிரதேசத்து சாதனையாளர்களையும் அரங்குக்குக் கொண்டு வந்துள்ள மையையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.

அவ்வகையில் தென்மராட்சி விளையாட்டுக் கழகம் நடத்தி வருகின்ற மெய்வல்லுநர் போட்டியில் சைக்கிள் ஓட்டப்போட்டியும் தொடராக இரண்டுதடவைகள் முதலாம் இடம்பெற்றுக் கொண்ட கந்தப்பா இராச துரை என்ற வீரரை ஊரறிய வைத்தவர்கள் இவர்கள்.

தேசிய மட்டத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் சாதனையாளர்கள் வளர்ந்து வருவதற்கு இன்றும் காரணமாயிருக்கின்ற இந்நிலையம் புகழும், கீர்த்தியுடனும் சிறப்பாகவும் செயற்பட்டு ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. இவர்கள்போல் அனைவரும் தத்தமக்குள் ஒன்றுபட்டும் பொது நோக்காகச் சேர்ந்தும் பணியாற்றினால் இப்பிரதேசத்தின் சுபீட்சம் வெகு தொலைவில் இல்லை யென்பது மட்டும் உறுதி. இந்நிலையம் இதே ஐக்கியம், புரிந்துணர்வு விட்டுக்கொடுத்தல் போன்ற உயரிய பண்புகளுடன் தொடர்ந்தும் எழுந்து காலத்தை வெல்ல வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

"கற்பதால் உயர்வோம் காலத்தை வெல்வோம்"

**கந்தையா கனகம்மா நிதியம்**

**தச்சன்தோப்பு.**

## வாழ்த்துக்கள் பல கோடி வாசிக சாலைக்கு வணக்கம் ஆயிரம் கோடி

எழுத்துக்கள் தமிழால் தேடி வாழ்த்த வசனங்கள் தமிழில் நாடி

மாற்றங்கள் வந்துபோகினும் புகழ் பாடி மாறாத எங்கள் மண்வாசம் தேடி....!

காலங்கள் கடந்தன கனவுகளாய் காந்தி நிலையத்தின் நினைவுகளாய்!

கல்லும் கசிந்தது கனிவான வார்த்தைகளால் கனவான்களின் கற்பனைகளும் இனிதே நடந்தேறிக்கொண்டிருக்கின்றது!.... நற்காரியங்கள் அனைத்தும் நல்லபடியே!

கற்பனையில் காணாத நிர்வாகத்தால் ஆரம்பித்தனர் பொது நலத்திட்டங்கள் ஆனந்தம் கண்டோர் நம் ஊர் பொதுமக்கள் ஆர்வம் கொண்டோரே நம்மில் பலர்!

ஆணவம் அற்ற ஆட்சியால் அலையெனத் திரண்டனர் அற்புதமான உறவுகள்!

இல்லை என்போருக்கு இன்பமான வார்த்தைகளால்! இடர்களைத் தகர்த்த இறைவனுக்கு நிகரானவர்களே!

தடைகளைத் தகர்த்தனர் தானாகவே இணைந்தனர்!

பல திறமையானவர்களை கண்டது நிலையம் தென்மராட்சியில் முதன்நிலையாம் காந்தி பெருமையாக்கிய பெருந்தகைகளே!

வாழ்த்த வார்த்தைகள் புதிதாயத் தேடி வாழ்த்துவோம் வாரீர்!!!! எல்லைகளைத் தாண்டியும் சென்றனர் எம் ஊர், எம் மக்கள் என எண்ணி எம்மோடு இணைந்தனர்!!

எப்படி எல்லாம் வாழலாம் என்பது அல்ல வாழ்க்கை! எவ்வாறு வாழ வேண்டும் என எமக்கு எல்லாம் எடுத்துரைத்தனர்!!!

ஊரே பேசும் தமிழ் உத்தமர்கள்! ஊர் ஊராகப் பேசப்பட்ட எமது ஊர் கல்வியியலாளர்கள்!!

வீரத்துக்கு வீரம் காட்டும் வித்தகர்கள்! விளைநிலம் அறுவடைக்கு காத்திருந்து! வீரம் காட்ட மைதானமாய் அன்னம் இட்ட அன்னையாய்

**மாலைநேர இலவச கல்வி - 2018 ஆரம்பிக்கப்பட்ட போது**






**வடமாகாண அணி இலங்கை தேசிய 19வயது அணியில் இடம்பிடித்திருந்த எமது மண் வீரன் செ.மதுஷன்**

காந்தி சனசமூக நிலையம்

**இல்ல விளையாட்டுப் போட்டி 2017 சிறுவர்கள்**





**வேம்பிராய் கண்ணகி அம்மன் ஆலய வேட்டைத் திருவிழா 2017-2018**

**இல்லங்களின்
அலங்காரம்
பச்சை இல்லம்-2018**





**இல்ல விளையாட்டுப்
போட்டி - 2017
விருந்தினர் வரவேற்பு**

திகழும் வயல் நிலமதில் வீர வீராங்கனைகளின் வெற்றி!
வெறி வேட்கையுடன்!!! வீரக் கைகளிலே பல வெற்றிக்கேடயங்கள் சொல்லாதோ ஊர்ப்புகழை!! ஏன்
வெற்றிப் புகழையும்!! பல அணிகள் பதறி ஓடி ஒழிய! பல அணிகளை வெற்றி கண்டது ஞாபகம் தாராயோ நினைவுகளாய்!! பலபேர் வந்துபோகினும்! பலரது ஆட்சியும் வந்து போகினும்!...
நிலையத்தின் கட்டுப்பாடுகளை கடைப்பிடித்தவர்களே!!! மாற்றம் காணும் வாழ்வினிலே!
ஏற்றம் காணவேண்டும் என ஏணிகளைப்போல் தாங்கியவர்களே!! பண்புக்கும் பணிவுக்கும் வேலன்பிராய்!! வெற்றி
பெறுவது வேலன் கையில் வேலைப்போல் வெற்றி தான் என்னும் வழக்கப்பட்டதுவே!!!
பயணங்கள் எமதாகினும்! பாதைகள் அவனதே! வாழ்த்துக்கள்!! வாழ்க்கையின் ஜீவநாடிகள்!
வாழ்த்துவோரும் வாழ்த்தப்படுவோரும்! நன்மைகொள்வதென்னவோ கோடி!
வாழ்த்தின் மேன்மை அறிந்து இயற்கையைப் போற்றுவோம்! நம்மை நாமே வாழ்த்திப் பாராட்டுவோம்!
நம் எண்ணங்கள் ஏகாந்தம் பெற இன்னல் இல்லா வாழ்வுதனைப் பெற்று! இன்பம் சேர்த்து!
ஈகை பாராட்டி! போற்றுதலோடு வாழ்த்தப்பெற்று! அகம் மகிழ்ந்து ஆனந்தம் பாடி!
இன்பத்தோடு ஈகை உள்ளத்தோடு! ஊன்றுகோலாய் எவ்வேலையிலும் ஒற்றுமைகொண்டு ஏற்றங்காண்போம்!!
ஐயம் தெளிந்து ! ஒலி ஒளியாய் ஓதுதலில் வெற்றிகொண்டு! ஔடதமே இல்லா அஃதொரு வாழும் பாதை அமைத்து! வாழ்த்துக்கள் பலவற்றோடு! குருநெறியில் வாழ்ந்திட! வாழ்வின் நோக்கம்
விளங்கிடுமே! எங்கள் வாழ்வும் வளமும் நிறைந்திடுமே என்றும் நீண்டு நிலைத்திடுமே!!!

**நிலைய செயலாளர்**
**சி.றஜிதாஸ் (ரஞ்சித்)**

எமது கிராமத்தில் அமைந்து இருக்கும் எமது காந்தி சனசமூக நிலையம் 65 ஆம் ஆண்டு விழாவை கொண்டாடுவதில் மிகவும் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றேன். எமது மக்களின் ஒற்றுமையோடு இந்த ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டிகளும் மிகவும் சிறப்பாக நடத்தி முடிக்க எனது வாழ்த்துக்கள்.

""ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

""சிறுதுளி பெரு வெள்ளம்"

""கட்டி எழுப்புவோம் எமது நிலையத்தை"

ராஜ்குமார் (ராஜ்)
புலம்பெயர் வாழ் நிர்வாக செயலாளர்.

# அன்றைய நினைவுகளும் இன்றைய வழிகாட்டலும்

எமது காந்தி சனசமூக நிலையம் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுவதை இட்டு நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். எமது நிலையமானது பல கால்விமான்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்வளும் என பல சாதனையாளர்களை உருவாக்கியுள்ளது. அந்தவகையில் எமது நிலையமானது 1953 ஆம் ஆண்டு பல ஸ்தாபகர்களால் ஒன்றிணைந்து ஆரம்பிக்கப்பட்டது. அவர் களின் வழிகாட்டலில் 1986 ஆம் ஆண்டு எமது உறவினர்களால் சிறுவர் பாலர் பாடசாலையும் நிலையமும் கட்டியெழுப்பப்பட்டதை நாம் சிறுவயதிலேயே காணக்கூடியதாக உள்ளது.

மேலும் இவர்களின் வழிகாட்டலில் நாமும் புலம்பெயர் உறவுகளும் எமது கிராம மக்களும் ஒன்றிணைந்து இந்த ஆண்டு விழாவினையும் இம்மலர் வெளியீட்டினையும் வெளியிடுவதை இட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இது போன்ற நிகழ்வுகள் மென்மேலும் இனிவரும் காலங்களில் தொடர்ந்து நடைபெற வேண்டுமென வாழ்த்தி எமது கிராமத்து மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் எமது நிலையம் மென்மேலும் வளரவும் வாழ்த்துகின்றேன்.

பொருளாளர்
கி.ஸ்ரீஸ்கந்தராசா

## வாழ்த்துச் செய்தி

ஈழத்தின் சிரத்தில் நாவற்குழி கிழக்கு என்னும் ஸ்தலத்தில் அமைந்துள்ள அகிம்சை என்னும் சொல்லின் அர்த்தத்தை தனது செயலிலும் தனது பெயரிலும் கொண்டு 65 ஆண்டுகள் திறமையான நிர்வாகத்தின் மூலம் தனது சேவையை ஆற்றிக் கொண்டிருக்கும் காந்தி சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய இலத்திரனியல் காலகட்டத்தில் வாசிப்பின் முக்கியத்துவம் பலராலும் வலியுறுத்தப்படுகின்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்ற முதுமொழியை இன்றைய இளைய சமூகத்துக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. நவீன இலத்திரனியல் சாதனங்களை விடுத்து அறநூல்கள், பத்திரிகைகளை பிள்ளைகளின் கைகளில் தவழ வழி செய்ய வேண்டும். இன்றைய யாழ்ப்பாண சமூகத்தில் வன்முறையும் சமுதாயப் பிறழ்வும் தலைதூக்கியுள்ளமை கண்டு மூத்தோரும் சமூக நோக்குள்ளோரும் கவலையுறுகின்றனர். இத்தகைய நிலையில் இளைய சமுதாயத்தை வழிப்படுத்தி அவர்களை தமது ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் பயன்படுத்துவதற்குப் பெரிதும் உதவுவன சனசமூக நிலையங்களும் அதனுடன் இணைந்த விளையாட்டு கழகங்களும் அரங்குகளும் ஆகும். இவையே ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் தூண்கள் என்பது மிகையல்ல.

அந்த வகையில் காந்தி சனசமூக நிலையமானது நாவற்குழி கிழக்குப் பகுதியில் இளையோரின் அறிவு வளர்ச்சிக்கும் விளையாட்டு திறனை ஊக்குவிப்பதற்கும் பெரிய அளவில் பங்காற்றி வருகிறது. இந்த இலட்சிய சேவையை 65 ஆண்டுகளாக எந்த தங்கு தடையும் இன்றி செய்து வரும் காந்தி சனசமூக நிலையத்தின் சேவையை மனதார வாழ்த்துவதோடு காந்தி சனசமூக நிலையம் மேலும் வளர்ச்சியடைந்து இளைய சமூகத்துக்கு அறிவொளி பரப்பி சமூக மறுமலர்ச்சிக்கு வித்திட இறையருள் வேண்டி வாழ்த்துவதில் உளம் மகிழ்கின்றேன்.

**இரத்தினசிங்கம் இரட்ணகரன்**
**முன்னாள் தலைவர்,**
**முன்னாள் செயலாளர்,**
**இன்னாள் நிர்வாக கணக்கு ஆய்வாளர்.**

## எப்போதும் நான் உங்களுடன்

எமக்குப் பல நல்ல விடயங்களை கற்றுத்தந்து வழிகாட்டிய இந்த நிலையத்துக்கும் எமது கிராமத்து மக்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகய சிறப்பான ஆண்டுவிழாவைக் கொண்டாட முடிவெடுத்த நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் கிராம மக்களுக்கு எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

ஆண்டு விழாவை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து கொண்டாடுவதால் தான் எமது சிறுவர்களின் தனிப்பட்ட திறன்களை வெளிக்கொண்டுவர முடியும். ஒவ்வொரு குழந்தைக்குள்ளும் கண்டிப்பாக ஒரு திறமை இருக்கும். அதைக் கண்டறந்து அவர்களின் ஆர்வத்தைத் தூண்டி அவர்களை முன்னேற்றி உலகுக்கு வெளிப்படுத்த நாம் எமது நிலைய ஆண்டுவிழாவைக் கண்டிப்பாக ஒவ்வொரு வருடமும் நடத்த வேண்டும்.

விழா திட்டமிடல் மிகவும் சிறப்பாக அமைந்தது. நாம் பிறர் கருத்துக் களுக்கு மதிப்புக் கொடுக்கும் பொழுது அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி தம் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள் ஆதலால் புதுப்புது யோசனைகள் கிடைத்தது.

பெற்றோர்கள் பிள்ளைகள் நிர்வாகசபை உறுப்பினர்கள் ஆண்டுவிழா செயற்பாட்டுக் குழு எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட்டதனால்தான் இவ் ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட முடிகின்றது.

இனிவரும் காலங்களில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யும் பட்சத்தில் நாம் அனைவரும் அவர்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்து இன்னும் திறம்பட எமது நிலையத்தை வளர்க்க வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகின்றேன்.

**சரவணமுத்து சதீசன்**

# காந்தி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழா

பலருக்கு ஆசியுரை / வாழ்த்துரை வழங்குவதற்குச் சந்தர்ப்பம் அளித்த நிலைய நிர்வாகத்துக்கு முதற்கண் எனது நன்றிகள்.

வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதற்கு இனிமேல்த்தான் நாங்கள் எங்களைத் தகுதியானவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற நிலையில் நான் தயங்குகின்றபொழுது

எனது அப்பாவின் சார்பில் இந்த ஆசியுரையை வழங்குமாறு தற்போதைய தலைவரும் போஷகரும் கேட்டுக்கொண்டதற்கிணங்க சில வரிகளை எழுதவிழைகின்றேன்.

காந்தி ச.ச.நிலையத்தின் ஆண்டு விழாவை முன்னிட்ட கலை நிகழ்வுகள். விளையாட்டுக்கள் மற்றும் நூல் வெளியீடு போன்றவற்றை முதன்முறையாக பெருமெடுப்பில் ஏற்பாடு செய்து நடத்திவரும் திரு செ.பாலேந்திரன் தலைமையிலான நடப்பு நிர்வாகத்துக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் என்றும் உரியது.

அதேபோல ஊர்விட்டுப் பிரிந்தாலும் தமது உறவுகளை மறவாது — தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கும் திரு.ஜெ.ஜெயபாலன் தலைமையிலான புலம்பெயர் உறவுகளுக்கும் எனது நன்றி கலந்து பாராடடுக்கள்.

நிர்வாகத்தினரின் அன்பு வேண்டுகோளை ஏற்று நிலையம் தொடர்பாக எனக்குத் தெரிந்த மற்றும் நான் அறிந்த சில வரலாற்றுக் குறிப்புக்களை இங்கு இணைத்துக்கொள்ள எண்ணுகின்றேன்.

நாவற்குழி கிழக்கின் தச்சன் தோப்பில் அமைந்திருக்கும் வயலும் வயல் சார்ந்த நிலமும் கொண்டது எமது வேலம்பிராய் கிராமம். எங்கள் கிராமத்தில் பிறந்து வளரும் ஒவ்வொருவருக்கும் கண்ணகை அம்மன் கோயிலையும் வேலம்பிராய் குளத்தையும் போல காந்தி ச.ச.நிலைய மும் அன்றாட வாழ்வில் - எம் மக்களின் வளர்ச்சியில் கலந்துவிட்ட ஒன்றாகவே இருக்கின்றது.

" நன்றி மறப்பது நன்றன்று" என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க எமது



இல்ல விளையாட்டுப் போட்டி வீர வீராங்கனைகள்



சிறுவர் முன்பள்ளி பேச்சுப் போட்டி



**முன்பள்ளி மாணவர்களது**
**இல்ல விளையாட்டுப் போட்டி**
**2018**



**விருந்தினர்கள் உபசரிப்பு**
**இல்ல விளையாட்டுப் போட்டி**
**2017**



**மகளிர் தின விழா**
**2018**

நிலைய தோற்றத்திலும் வளர்ச்சியிலும் சம்பந்தப்பட்டவர்களை நன்றியுடன் மனதிற்கொள்வது இன்றைய நாளில் எமது தலைமுறைக்குள்ள பண்பாட்டுக் கடமையாகும்.

எமது கிராமத்தின் பெருந்தகைகள் திரு.திருமதி முத்தையா — நல்லம்மா, திரு.திருமதி செல்லர் - செல்லம்மா ஆகியவர்களது குடும்பங்களினது பங்களிப்புடனும் திரு.திருமதி சின்னபபு — வெள்ளையம்மா. திரு.திருமதி அப்பையா — பொன்னம்மா. திரு.திருமதி சின்னப்பொடி — முத்தம்மா ஆகியவர்களது குடும்பங்களினது சம்மதத்துடனும் 1953 ஆம் ஆண்டில் எமது ச.ச.நிலையத்துக்கான காணி நன்கொடையாகப் பெறப்பட்டது.

மகாத்மா காந்தி தலைமையிலான சுதந்திரப் போராட்ட வெற்றியும் அதன் பின்னர் அகிம்சையை தமது போர் வழியாகப் பின்பற்றத் தொடங்கிய ஈழத்துத் தமிழ்த் தலைவர்களும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த காலமது. அத்தகைய புறச் சூழலில் எமது ஊரின் அப்போதைய இளைய தலைமுறையினர் 1953 ஆம் ஆண்டு சித்திரை வருடப் பிறப்பு நாளன்று ஒன்று கூடி காந்தி சனசமூக நிலையம் என்ற பெயரிட்டு நிலையத்தை ஆரம்பித்தனர். இவ்விதம் ஆரம்பிக்கப்பட்ட ச.ச.நிலையத்துக்கு 1963 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டது. காந்தி ச.ச.நிலையத்தின் ஸ்தாபிதம் மற்றும் அதன் வளர்ச்சியில் நிலையத்தின் " பிதாமகர்" என்று சொல்லக் கூடிய திரு வைரமுத்து நடராசா அவர்களின் சமூக-அரசியல் செல்வாக்குப் பெரிதும் உதவியாக இருந்திருக்கின்றது. அவருக்கு உறுதுணையாக அப்போதைய இளைஞர்களான சின்னப்பொடி சிங்கராசா, கந்தர் ஐயாத்துரை போன்றவர்கள் உள்ளிட்ட பலர் இருந்துள்ளனர்.

பின்னர் 1981 ஆம் ஆண்டில் எனது தந்தையார் பொன்னையா இராசநாயகம் அவர்கள் மாதர் சங்கத்தையும் இலவச பாலர் பாடசாலையையும் (இ.கி.மீ.நிறுவன உதவியுடன்) ஆரம்பித்து வைத்தார். எனது தந்தையாரின் இந்த வேலைத்திட்டங்களுக்கு காலஞ்சென்ற திரு.வைரமுத்து சரவணமுத்து அவர்கள் உள்ளிட்ட ஊர்ப் பெரியவர்கள் பலரும் துணையாக நின்று உதவியமை நன்றியுடன் குறிப்பிடப்பட வேண்டியது.

பாலர் பாடசாலையின் முதல் ஆசிரியையாக செல்வி ரதி (திருமதி சற்குணம் ரதி) அவர்கள் நியமிக்கப்பட்டார். மாதர் சங்கத்தின் முதல் தலைவியாக திருமதி லீலாவதி இராசநாயகம் (லலிதா) அவர்களும் முதல் செயலாளராக திருமதி தங்கம்மா சரவணமுத்து அவர்களும் முதல் பொருளாளராக திருமதி நவமணி ஐயாத்துரை அவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இக்காலப் பகுதியில்தான் " கிள்ளை மொழிப் பாலர் களிக்கும் ....." என்று தொடங்கும் பாலர் பாடசாலைக் கீதத்தை எனது தாயார் திருமதி லீலாவதி இராசநாயகம் (லலிதா) அவர்கள் இயற்றி மெட்டமைத்துக் கொடுத்திருந்தனர்.

தற்போது நாம் காணும் நிலையக் கட்டடமானது 1985 – 1986 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திரு.சரவணமுத்து சதீஸன் அவர்கள் தலைமையில் திரு.தியாகராசா திலகன் மற்றும் திரு.கிட்டிணன் தவராசா உள்ளிட்ட நிர்வாகத்தினர் பதவிவகித்த பொழுது அந்த நிர்வாகத்தினரின் தனிப்பட்ட உழைப்பில் கட்டப்பட்டதாகும். பின்னாளில் எனது தந்தையார் மாலைநேர ஆங்கில – கணித வகுப்புக்களை ஆரம் பித்து நடத்துவதற்கு இந்தக் கட்டடமானது மிகவும் உதவியாக இருந்தது.

காந்தி சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் காணி வழங்கி உதவியவர்களின் குடும்பங்களினதும் அவர்களின் வழி வந்தவர்களின தும் சேவைகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் அளப்பரியவை. ச.ச.நிலை யத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியில் நேரடியாகவும் இலைமறை காயாகவும் நின்று உதவிய பெருமக்கள் பலர் உள்ளனர். நிலைய வரலாற்றை எழுதுபவர்கள் அவர்கள் தொடர்பான விரிவான தகவல் களைப் பெற்று அவற்றை நன்றியுணர்வுடன் வெளிப்படுத்த வேண்டும் என்ற எனது வேண்டுகோளை இந்தச் சந்தர்ப்பத்தில் பணிவுடன் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மேலும் நிலைய வளர்ச்சிக்காக பல்வேறு வழிகளிலும் தமது பங்களிப் புக்களை நல்கிய கடந்தகால நிர்வாகங்களையும் அவற்றுக்கு எப் போதும் தமது ஒத்துழைப்புக்களை அள்ளி வழங்கிய எமது ஊர் மக்களையும் நான் மனதிற் கொள்கின்றேன்.

காந்தி ச.ச.நிலையமானது வருங்காலத்தில் எமது ஊரில் உள்ளக மற்றும் வெளியக வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானம், கணினி வசதிகளுடன் கூடிய நூலகம் மற்றும் நவீன பூங்கா போன்ற

வற்றை உருவாக்குவதற்கு உழைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு நிலையச் செயற்பாடுகள் அனைத்திலும் எங்கள் ஊர் மக்களின் பூரண ஒத்துழைப்பு தொடர்ந்து இருக்கும் எனவும் எதிர்பார்க் கின்றோம்.

காந்தி ச.ச.நிலையத்தின் சேவைகள் மேலும் வளரவும் அதன் மூலம் எமது ஊர் மக்கள் இன்னும் பல நன்மைகளைப் பெற்று நலமாக வாழவும் எல்லாம் வல்ல பரம்பொருளின் ஆசியை வேண்டுவோம்.

பொ.இராசநாயகம்

அகில இலங்கை சமாதான நீதிவான்

காந்தி ச.ச.நி. முன்னாள் தலைவர் மற்றும் முன்னாள் போஷகர் அவர்களின் சார்பில்

இராசநாயகம் குமணன்

**(சம்பத் வங்கி முகாமையாளர்)**

# 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு அறிக்கை

01. சிறுவர் முன்பள்ளி ஆசிரியை நியமிப்பதில் இருந்த பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைத்து சிறுவர் முன்பள்ளியை மீண்டும் இயங்க வைத்தமை

02. சகலரையும் அங்கத்தவர்களாக்கும் முயற்சியில் 200 பேரை அங்கத்தவர்களாகச் சேர்த்து, சந்தாப்பணம் அறவிட்டு செயற்படுத்தியமை

03. நிலைய இல்ல விளையாட்டுப் போட்டியினை மிகவும் சிறப்பாக நடத்தியமை -2017

04. வேலம்பிராய் அம்மன்கோயில் வேட்டைத் திருவிழாவை எல்லோரும் மெச்சக் கூடிய வகையில் சிறப்பாக நடத்தியமை

05. லண்டனிலிருந்து விடுமுறையில் வருகை தந்திருந்த டாக்டர் சாளினி பாலேந்திரா அவர்களால் இலவச மருத்துவமுகாம் நடத்தப்பட்டமை

06. உள்ளூரில் நடைபெறும் திருட்டுச் சம்பவங்களை தடுக்கும் நோக்கில் சாவகச்சேரி பொலிசாரின் ஆதரவில் விழிப்புக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

07. அனைவரும் பயன்படும் வகையில் இலவச சட்ட ஆலோசனை வழங்க ஏற்பாடு செய்தமை செ.துரைராசா அவர்களின் வேண்டிதலின் பிரகாரம்.

08. கோவிலாக்கண்டி கிராம அபிவிருத்திச் சங்கம் பல வருடங்களாக இயங்காமல் இருந்து இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளுடன் தொடர்ந்து கதைத்து மீண்டும் இயங்கச் செய்ததுடன் எமது நிலைய அங்கத்தவர்கள் செயலாளர், உபசெயலாளர் ஆகவும் மேலும் 4 பேர் நிர்வாகசபையில் இடம்பெறச் செய்தமை

09. விளையாட்டு குழு சிறப்பாக செயற்பட ஒரு குழுவை அமைத்து அதனைப் பதிவுசெய்து பிரதேச மட்டத்தில் சிறப்பாக விளையாடச் செய்தமை

10. மகளிர் அணியினரின் மகளிர் தினத்திற்காக சிறப்பாகச் செய்தமை -2018

11. சிறுவர் முன்பள்ளி விளையாட்டு விழாவை சிறப்பாக நடத்தியமை – 2018

12. எமது அங்கத்தவர் திரு.செல்வராசா அவர்களின் புத்திரன் திரு.மதுசன் அவர்கள் யாழ். மத்திய கல்லூரிக்கு பெருமை சேர்த்தமைக்காக அவரை மிகவும் கோலகலமாக அழைத்து கௌரவித்தமை

13. மிகவம் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர் வழங்கல் பிரச்சினைக்கு ஓர் நிரந்தர தீர்வு கண்டமை

14. 2017 ஆம் ஆண்டு நடத்தபடவிருந்த ஆண்டு விழாவுக்காக நடத்தப்பட்ட சிறுவர் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றிய அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

15. நவராத்திரி விழா. தைப்பொங்கல் விழா என்பன சிறப்பாக நடத்தப்பட்டமை

16. விழிப்புக் குழு உருவாக்கப்பட்டமை (இளைஞர்கள் தாமாக முன்வந்தமை

17. நிலையதிற்கான பொருட்கள் (உபகரணங்கள் சேகரித்தமை கொடிக்கம்பம் - 03 வெற்றிக்கிண்ண அலுமாரி – செய்தமை

18. பத்திரிகை போடுதல் - 2017 – 2018

19. 2018 ஆம் ஆண்டு அங்கத்தவர்கள் 200பேரை இணைத்தமை


20. புலம்பெயர் நிர்வாகத்தை மீண்டும் இயக்க வைத்தமை

21. ஆண்டுவிழா இல்ல விளையாட்டுப்போட்டி 2018 ஆகியவற்றிக்கு அனுசரணையாளர்கள் ஏற்படுத்திமை

22. வேம்பிராய் அம்மன் கோயில் வீதி. புனரமைப்பு வேலைகள் நடத்த நிலையத்தினால் அழுத்தம் கொடுத்தமை

23. 65 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி வடமாகாண ரீதியில் நடத்திமை

24. மாபெரும் 65 ஆவது ஆண்டுவிழா சிறப்புற நடைபெற்றமை.



# காந்தி சனசமூக நிலையம்

ES Print - Jaffna.

மனதால் இணைந்து
மாற்றங்களை வரவேற்போம்

# எழுக நிலையம்
# வளர்க மக்கள்



அனுசரணை:-
திரு.வே.கிருஸ்ணன்
மதுரநாயகி குடும்பம்